தலைமையகம்,
சிவில் பாதுகாப்புத் திணைக்களம்,
இல 23, புகையிரத நிலைய வீதி,
பம்பலப்பிட்டி
2017.06.01

சுற்றறிக்கை இல 10/2017

மேலதிக பணிப்பாளர் நாயகம்,
சகல பணிப்பாளர்கள்,
சகல பிரதிப் பணிப்பாளர்கள் - மாவட்ட உத்தியோகத்தர்கள்
சகல படைப்பிரிவுகளுக்கும் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள்,
பயிற்சிப் பாடசாலைகளின் கட்டளையிடும் அதிகாரிகள்,

**படைவீரர் / வீராங்கனைகளிடமிருந்து பணம் அறவிடுதல்**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக படைவீரர் / வீராங்கனைகளிடமிருந்து நிதி மற்றும் பொருள் ரீதியான நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன. இதன் காரணமாக திணைக்களத்தின் பணிப்பாளர் சபை மிகவும் சிரமத்துள்ளாகியுள்ளது.

இவ்வாறான நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது திணைக்களத்தின் படைவீரர் / வீராங்கனைகளின் நலனுக்காக மாத்திரமேயாகும். வீடமைப்பு, பாடசாலைப் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்குதல், 5 ஆம் ஆண்டு புலமைப் பரசில், உயர் தர புலமைப் பரிசில் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கணினிகள் வழங்குதல் என்பன அவற்றில் உள்ளடங்கும். நலன்களை அனுபவித்துக்கொண்டு இவ்வாறு பல்வேறுபட்ட தரப்பினருக்கு முறைப்பாடுகளை அனுப்புவதன் மூலம் படைவீரர் / வீராங்கனைகளின் அதிருப்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பின்வருமாறு படைவீரர் / வீராங்கனைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நலன்புரி நடவடிக்கைகள் அனைத்தும் இன்றைய தினம் தொடக்கம் நிறுத்தப்படுகின்றன.

அதற்கிணங்க,

- ஏப்ரல் மாதத்தில் சேவா வனிதா பிரிவினால் நடாத்தப்படும் புத்தாண்டுச் சந்தையை நடத்தாது அதற்கான சேகரிப்புக்களை நிறுத்துதல்.
- சேவா வனிதா பிரிவினால் முன்னெடுக்கப்படும் லொத்தர் சீட்டிலுப்பு மற்றும் லொத்தர் சீட்டு விற்பனையை நிறுத்துதல்
- பணிப்பாளர் (அழகியல்) மூலம் நடாத்தப்படும் சங்கீத கண்காட்சிக்கு படையினருக்கு டிக்கட் புத்தகங்களை விற்பனை செய்வதை நிறுத்துதல்
- படைப்பிரிவுகளின் மேற்பார்வை மற்றும் உற்சவங்களுக்கு வருகைத்தரும் உத்தியோகத்தர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்குவதை முற்றாக நிறுத்துதல் அதற்காக பணம் அறவிடுவதை நிறுத்துதல்
- வேறு முறையில் உள்ள சேகரிப்புக்களை நிறுத்துதல்
- வேறு எந்தவொரு உற்சவம் அல்லது செயற்பாட்டுக்கும் நிதி சேகரிப்பதை நிறுத்துதல்

மேற்படி தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சகல படையினரையும் இது தொடர்பாக அறிவூட்டுதல் வேண்டும். படையினர் இந்த செய்தியை அறிந்துகொள்ளும் பொருட்டு படைப் பிரிவு நிலையங்கள் மற்றும் உப படைப் பிரிவு நிலையங்களின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தியது தொடர்பாகவும் இந்த கட்டளை கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரவும்.

**சந்திரரத்ன பல்லேகம**
**பணிப்பாளர் நாயகம்**